**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி</u>**

**<u>C.C. 320-13</u>** **Previous Date :27-4-14**
**<u>19-12-22</u>**

**அரசுசாட்சி 1 மகுடீஸ்வரன் த/பெ. வேலுச்சாமி சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். எதிரி தரப்பில் மேற்படி அ.சா.1- குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் குறுக்கு விசாரணை,**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனம் என்னுடையது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது வாகனத்தை இறந்துபோன கணேசன் ஓட்டிச் சென்றார். விபத்து நடந்தபோது நான் மயக்கமாகி விட்டேன். அதனால் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. நான் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் வாகன எண் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனையில் போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கும்போது நான் கைரேகை மட்டும் தான் வைத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. இறந்து போன கணேசன் தான் இருசக்கர வாகனத்தை கவனக் குறைவாக ஓட்டிச் சென்று எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றும், இறந்து போன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இழப்பீடு பெற வேண்டும் என்ற நோக்கில் தவறான தகவலின் அடிப்படையில் புகார் தரப்பட்டு அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.12.22 17:26:01 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி